சார்பு நீதிமன்றம், மன்னார்குடி
OS 33/2015

09.01.2024

**பி.வா.சா.1 மோகன்தாஸ் த/பெ.மாரியப்ப வள்ளால தேவர் மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:-**

இந்த வழக்கானது எனது அக்கா தாக்கல் செய்துள்ளார். எனது தகப்பனாரின் இரண்டாவது தாரத்தின் முதல் மகள் ஆவார். இந்த வழக்கில் மொத்தம் 25 அயிட்ட சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 25 அயிட்ட சொத்துக்களில் ஒரு பகுதி எனது தகப்பனாரின் பெண் வாரிசுகளின் பெயரில் உள்ளது. 1 ஹெக்டேர் 38 ஏர்ஸ் உள்ளது. மீதமுள்ள சொத்துக்கள் மோகன்தாஸ், ரவீந்திரன், யோகானந்தம், ரத்தினகுமார் மற்றும் எனது அம்மா அம்பிகா ஆகியோர் பெயரில் உள்ளது. மொத்தமாக மேற்படி நபர்களின் மீது 45 மா உள்ளது அல்லது 15 ஏக்கர் இருக்கும். எல்லா சொத்துக்களுக்கும் எனது தகப்பனார் இருக்கும்போதே பட்டா மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. எனது தகப்பனார் மாரியப்பன் மற்றும் மேற்படி நபர்களின் பெயரிலும் பட்டா உள்ளது. எனது தகப்பனார் இருக்கும்போதே வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் பட்டா மாற்றம் செய்யப்பட்டது. 1986 ம் வருடம் பட்டா மாற்றம் செய்யப்பட்டது. எனது தகப்பனாரின் வாரிசுகளில் கடைசியாக யோகானந்தத்திற்கு திருமணம் நடந்தது. அவருக்கு 2013 திருமணம் நடைபெற்றது. அதுவரைக்கும் கூட்டுக்குடும்பமாக இருக்கிறோம் என்றால் சரியல்ல. குடும்ப உறவினர்கள் மூலம் 1986 ல் பாகப்பிரிவினை செய்யப்பட்டது. பட்டா எண். 464 ல் கண்ட சொத்தை எனது தந்தை உயில் எழுதி வைத்துள்ளார். உயில் எழுதி வைத்தற்கு பிறகு எனது தந்தை 2008 ல் காலமானார். அந்த உயிலில் கண்டபடி சொத்துக்கள் அனைத்தும் எனக்கு சொந்தம் என்று எழுதி வைத்தார். அந்த சொத்துக்கள் எல்லாம் பட்டா மாற்றிக்கொள்ளவில்லை. எனது தந்தை 2006 ல் எழுதி வைத்த உயில் 2008 ம் வருடம் நடைமுறைக்கு வந்துவிட்டது. இருந்தபோதிலும் நான் பட்டா ஏதும் மாற்றிக்கொள்ளவில்லை. இந்த வழக்கிற்கு முன்பு 04.03.2013 ல் எனது சகோதரி செந்தமிழ் செல்வி பாகம் கேட்டு தஞ்சாவூர் அட்வகேட் மூலம் நோட்டீஸ் அனுப்பினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நானும் அந்த நோட்டீஸில் கையெழுத்து போட்டு வாங்கி கொண்டேன் என்றால் நான் வாங்கவில்லை.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

Sd/- லீலாவதி

Sd/- திரு. கே. சக்திவேல்,
சார்பு நீதிபதி , மன்னார்குடி.